தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-8-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**சின்ன வெங்காய விலை பற்றிய ஒரு இடைக்கால சந்தை ஆலோசனை**

தென்னிந்தியாவில் பயிரிடப்படும் சின்ன வெங்காயம் ஒரு முக்கிய காய்கறி பயிராகும். சென்ற ஆண்டை ஒப்பிடுகையில், தற்போது சின்ன வெங்காயத்தின் விதைப்பு நாற்றாங்கால் மற்றும் விதைகள் மூலம் எல்லா பருவங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரபிரதேசம் ஆகியவை சின்ன வெங்காயம் விளைவிக்கும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில், திண்டுக்கல், தாராபுரம், பெரம்பலூர், திருச்சி, தேனி ஆகிய மாவட்டங்கள் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் முக்கிய மாவட்டங்களாகும். நடப்பு சூழலில், உள்ளூர் சந்தைக்கு சின்ன வெங்காயத்தின் வரத்து திண்டுக்கல், தாராபுரம், பெரம்பலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்தும் மற்றும் கர்நாடகா மாநிலத்தில் மைசூரிலும் வரத்து வரத்தொடங்கியுள்ளன. முன்பு இல்லாத அளவில், மைசூரில் இருந்து வரும் வரத்து ஆவணி மாதம் வரை நீடிக்கிறது. வெங்காய வர்த்தகத்தில், கர்நாடக மாநிலம் தமிழநாட்டிற்கு முக்கிய போட்டியாளராக திகழ்கிறது. இலங்கையில், சின்ன வெங்காய உற்பத்தி பரவலாக காணப்படுவதால், தமிழ்நாட்டில் வெங்காய ஏற்றுமதி தேவை குறைந்துள்ளது.

பொதுவாக வெங்காய விலை மாற்றத்திற்கு அவற்றின் நிறம், அளவு, சேமிப்பு ஆகியவை காரணமாக இருக்கிறது. மைசூர் வெங்காயத்திற்கு சேமிப்பு திறன் 2-3 நாட்களே காணப்படுகின்றது. இதன் காரணமாக மீதமுள்ள இருப்பு வெங்காயத்தை குறைந்த விலைக்கு கிலோவிற்கு ரூ. 7-10-க்கு விற்கப்படுகிறது. உள்ளூர் வெங்காயம் அதிக சேமிப்பு திறன் மற்றும் நல்ல வரத்து இருப்பதால் அவற்றின் விலை கிலோவிற்கு

ரூ.13-16 க்கு விற்கப்படுகின்றது. உள்ளூர் சந்தையில், விதை வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 20க்கு விற்கப்படுகிறது. 18மி.மீ அளவு மற்றும் அதிக சேமிப்பு திறன் கொண்ட வெங்காயம் ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படுகின்றது. அவற்றின் விலை கிலோ ரூ. 25-30 க்கு விற்க்கப்படுக்கின்றது. தமிழ்நாட்டில் சின்ன வெங்காய வர்த்தக வியாபாரிகளின் கருத்துப்படி செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் விதை வெங்காயத்தின் தேவைகள் மற்றும் பண்டிகை காலங்களிள் தேவைகள் உள்ள காரணங்களினால் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் எல்லா பருவத்திலும் சின்ன வெங்காயம் கணிசமாக உற்பத்தி செய்யப்படுவதால் அவற்றின் தேவை மற்றும் அளிப்பு இடைவெளி குறைவாகக் காணப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் பண்ணை விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், ஆய்வு செய்து சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை செப்டம்பர்-அக்டோபர் 2016 மாதங்களில் கிலோவிற்கு ரூ.20-23 வரை இருக்கும் என கணிக்கப்படுள்ளது, மற்றும் விலை ஏற்ற இறக்கங்கள் பருவ மழையை சார்ந்து இருக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611374 / 6611283

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்